කොළඹ විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
**UNIVERSITY OF COLOMBO, SRI LANKA**

අපේ අංකය / Our Ref. No. :
ඔබේ අංකය / Your Ref. No. :
2021.02.05

அனைத்து பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் மற்றும்
அனைத்து பல்கலைக்கழகப் பணியாளர்களே!

**கொவிட் 19 தொற்றுநோயை எதிர்கொண்டு பல்கலைக்கழக நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்துதல்**

உலகில் அநேக நாடுகளில் வேகமாகப் பரவி வருகின்ற கொவிட் 19 காரணமாக, அத்தகைய நோயாளிகளின் எண்ணிக்கையும் உலகளாவிய ரீதியல் அதிவேகமாக அதிகரித்து வருகிறது. இந்த வகை நோயாளிகளின் விரைவான அதிகரிப்பின் பின்னணியில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கொவிட் 19 நோயுடன் தொடர்புடைய நோயாளிகளுடன் முதல்-நிலை மற்றும் இரண்டாம்-நிலை தொடர்புகளைப் பேணியவர்களின் எண்ணிக்கையிலும் சமீபத்தில் அதிகரிப்பு ஏற்பட்டு வருவது புலனாகிறது.

எவ்வாறாயினும், இந்தப் பெருந்த் தொற்றுநோய் அச்சுறுத்லை எதிர்கொண்டு தடைப்பட்ட மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்தை அடைவதற்காக, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகளை அரசாங்க சுகாதார ஆலோசனைகளுக்கு ஏற்ப பணியாற்றுகின்ற நாடு முழுவதும் இருந்து திறமையான கல்வியாளர்கள் மற்றும் பட்டதாரிகளை அழைத்து வருவதற்காக பல்கலைக்கழகம் விடாமுயற்சியுடன் கடுமையாக உழைத்து வருகிறது.

இந்த சந்தர்ப்பத்தில், கொவிட் பெருந்த் தொற்றுலிருந்து எங்கள் பல்கலைக்கழக மாணவர் மற்றும் பணியாளர் சமூகம் அதனைப் பலத்துடன் எதிர்கொள்வதற்காக பின்வரும் நடைமுறைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

ஒரு புதிய வாழ்க்கை முறையைப் பேணுவதுடன் தொடர்ச்சியான கல்வியைப் பெறுவது நம் அனைவரின் கூட்டுப் பொறுப்பாகிவிட்டது.

1. உடன் அமுலுக்கு வரும் வகையில், மாணவர் மற்றும் பணியாளர்களின் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பொரளஸ்கமுவ விடுதியினை ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள அதேவேளை, நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை தொடர்புபட்டவர்களின் கட்டங்கள் உருவாகி வருவதனால் இந்த வசதிகளை விரிவுபடுத்த பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்க உள்ளது.
2. பல்கலைக்கழக மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் மூலதன மானியத்தினைப் பயன்படுத்தி கொவிட் 19 க்கான துரித பிறபொருள் எதிரியாக்கிப் (ஆன்டிஜென்) பரிசோதனை மேற்கொள்வதனைத் துரிதப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.
3. பல்கலைக்கழகச் சுற்றுச்சூழலில் கொவிட் 19 நோய்த் தொற்றுக் குணங்குறிகளை காட்டுகின்ற தொற்றாளர்கள் அறிவிக்கப்படுமிடத்து, 1990 தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு துரித நோயாளர் காவு வண்டிச் சேவை அலுவலரின் அறிவுறுத்தல்

තැපැල් පෙට්ටි අංකය 1490, කුමාරතුංග මුනිදාස මාවත, කොළඹ 3, ශ්‍රී ලංකාව P.O. Box No. 1490, Cumaratunga Munidasa Mawatha, Colombo 3, Sri Lanka
தபாற்பெட்டி இல.1490, குமாரதுங்க முனிதாச மாவத்த, கொழும்பு 3. இலங்கை.

දුරකථන අංක : / தொலைபேசி இல: / Telephone Nos :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Vice-Chancellor | : | 2583810 | Fax : | 2586059 | E-mail | : | vc@cmb.ac.lk |
| Registrar | : | 2583818 | Fax : | 2553188 | E-mail | : | registrar@cmb.ac.lk |
| Bursar | : | 2586652 | Fax : | 2586652 | E-mail | : | bursar@cmb.ac.lk |
| General | : | 2581835, 2584695, 2585509 | | | | | |

மற்றும் வேண்டுகோளின் பேரில் அந்த சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்காக குறித்த பீடத்தின் நிர்வாக உத்தியோகத்தர், பீடாதிபதி, மாணவ ஆலோசகர் ஆகியோர்களுக்குத் தெரிவித்து அந்த சேவையினை உங்களுக்காக ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

4. உங்கள் பீடத்தில் அல்லது துறையில் கொவிட் 19 நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர் அல்லது நோய்த் தொற்றாளருடன் தொடர்புபட்டவர் இருப்பதாக அறிவிக்கப்படுமிடத்து, அந்த நபர் பற்றிய விபரங்களை பீடாதிபதி, துறைத் தலைவர் மற்றும் பல்கலைக்கழக மருத்துவ அலுவலருக்கு அறிவிக்க வேண்டும்.
5. இடர் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர், தனிமைப்படுத்தல் அறிவுறுத்தல்களுக்கு உள்ளாகும் மாணவ மாணவிகள் மற்றும் பணியாளர் குழாம் உறுப்பினர்கள் தமது பிரதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்படுகின்ற தனிமைப்படுத்தல் சான்றிதழினை மீண்டும் பணிக்குத் திரும்பும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
6. உங்கள் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காகத் தொற்று நீக்கிக் திரவம், சவர்க்காரம் மற்றும் கை கழுவதற்கான வசதிகள் பல்கலைக்கழகத்தினால் தங்களுக்காக ஏற்படுத்தித் தரப்படுகின்றது. இந்த அனைத்து சேவைகள் தொடர்பாகவும் பிரச்சனைகள் இருப்பின் குறித்த பீடத்தின் அல்லது சுற்றாடல்/ விடுதியின் நிருவாக அலுவலர், துணை விடுதிக் காப்பாளர் அல்லது ஒழுக்காற்று அதிகாரிக்குத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
7. அனைத்து சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மாணவ மாணவிகள் மற்றும் பணியாளர்களின் ஆரோக்கிய நிலையினைப் பாதுகாப்பது அனைவரினதும் சமூகப் பொறுப்பாகும்.
8. கொவிட் 19 தொடர்பான எந்தப் பிரச்சினைகள் தொடர்பாகவும் உங்களுக்கு மேலதிக விளக்கம் அவசியமாயின் பல்கலைக்கழகத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் தொலைபேசி இலக்கத்தினைப் பயன்படுத்தித் தொடர்பு கொள்ள முடியும் (0715371519/0715371510).

இது தொடர்பாக உங்கள் கருத்துக்கள், மற்றும் ஆலோசனைகளை முன்வைக்க விரும்பின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / பொது நிருவாகப் பிரிவு (prasannasar@ga.cmb.ac.lk) அல்லது உதவிப் பதிவாளர் / மாணவர் மற்றும் பணியாளர் அலுவல்கள் பிரிவின் (ar@ssa.cmb.ac.lk) ஊடாக மின்அஞ்சல் மூலம் ஆலோசனைகளை முன்வைக்க முடியும்.

துணைவேந்தர்
கொழும்புப் பல்கலைக்கழகம்